MOE KINDERGARTEN

# வலுவான அடித்தளத்தை நோக்கி!

**கல்வி அமைச்சின் பாலர் பள்ளி - இளம்பருவக்கால நிலையம் உடனிணைவு**









கல்வி அமைச்சு இரண்டு மாதம் முதல் ஆறு வயது வரையிலுள்ள பிள்ளைகளுக்குத் தரமான பாலர் கல்வியை அளிப்பதற்கு விழைகிறது. இதற்காக E-Bridge பாலர் பள்ளி, NTUC My First Skool, PCF Sparkletots பாலர் பள்ளி ஆகிய மூன்று இணை இயக்காளர்களுடன் கல்வி அமைச்சின் பாலர் பள்ளி உடனிணைந்து செயலாற்றுகிறது.



# E-Bridge பாலர் பள்ளியோடும் NTUC My First Skool-லோடும் PCF Sparkletots பாலர் பள்ளியோடும் உடனிணைவு

உடனிணைந்து செயலாற்றுவதன்வழியே E-Bridge-உம், My First Skool-உம், PCF Sparkletots-உம் இளம்பருவக்கால நிலையங்களாகச் செயற்படும். இவை இரண்டு மாதம் முதல் நான்கு வயது வரையுள்ள பிள்ளைகளுக்குப் பாலர் பள்ளிச் சேவையை வழங்கும்.

இந்தப் புதிய பாலர் பள்ளிச் சேவை அரசாங்கத்தின் ஆதரவுடன் பாலர் பள்ளியில் உள்ள இட எண்ணிக்கையை அதிகரிக்க உதவும். இதன்மூலம் இளம் பிள்ளைகள் உள்ள குடும்பங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

எங்களது பங்காளர்களைப் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெறக் கீழ்க்காணும் இணையத்தளங்களை நாடுங்கள்:



**E-Bridge Pre-School**

www.e-bridge.edu.sg

**PCF Sparkletots Preschool**

www.pcf.org.sg/sparkletots

**NTUC First Campus' My First Skool**

www.myfirstskool.com

# கல்வி அமைச்சின் பாலர் பள்ளி பற்றி

**கல்வி அமைச்சின் பாலர் பள்ளி ஒவ்வொரு பிள்ளைக்கும் வலுவான தொடக்கத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.**

**பிள்ளைகளுக்குப் பாதுகாப்பும் பரிவும் மரியாதையும் மிக்க கற்றல் சூழலை வழங்க நாங்கள் விழைகிறோம். இத்தகைய சூழல் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றைப் பேணி வளர்ப்பதற்கும் இன்றியமையாதது.**



**கல்வி அமைச்சின் பாலர் பள்ளி** ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கும் **(K1)**, ஆறு வயதுப் பிள்ளைகளுக்கும் **(K2)** நான்கு மணி நேரத் திட்டத்தை வழங்குகிறது.

கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளுக்குரிய இரு முக்கியத் திட்டங்களான **ஹை-லைட் திட்டம்**, **ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும்** வழங்கப்படும் **ஸ்டார்லைட் எழுத்தறிவுத் திட்டம்** முதலியவற்றின் வாயிலாகப் பிள்ளைகள் உற்சாகமான கற்றல் பயணத்தைத் தொடங்குவார்கள். இந்தத் திட்டங்கள் கல்வி அமைச்சின் இளம் பிள்ளைகளைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்தவை.

இத்திட்டங்கள் பிள்ளைகள் முழுமையான வளர்ச்சியில் கவனம் செலுத்துவதோடு அவர்கள் மகிழ்ச்சியுடன் கற்கத் தூண்டுகோலாக அமைகின்றன. கல்வி அமைச்சின் பாலர் பள்ளி, இளம் பருவத்திலேயே இருமொழிக் கல்வி, விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள் முதலியவற்றை வலியுறுத்துவதால், இது பிள்ளைகளின் எதிர்கால மொழி கற்றலுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தர உதவுகிறது.

பிள்ளைகளின் கற்றலை ஆழப்படுத்தும் வகையில் ஒவ்வொரு தவணையும் **அதிசய வாரத் திட்டப்பணிகளோடு** நிறைவுபெறுகிறது. பிள்ளைகள் தங்கள் நண்பர்களோடும் ஆசிரியர்களோடும் இணைந்து தங்களுக்கு விருப்பமான தலைப்புகளையொட்டி ஆராய்வார்கள். இத்திட்டப்பணிகளின் வாயிலாகப் பிள்ளைகள் சுயகற்றலின் இன்பத்தை அனுபவிப்பதோடு தங்கள் வினாக்களுக்கும் விடை காண்கிறார்கள்.



## கல்வி அமைச்சின் பாலர் பள்ளியை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- கட்டுப்படியான விலையில் தரமிக்க பாலர் கல்வி
- பரிவும் திறமையும் மிகுந்த கல்வியாளர்கள்
- விசாலமும் செறிவும் மிக்க கற்றல் சூழல்
- ஆங்கிலத்திலும் 3 தாய்மொழிகளிலும் வழங்கப்படும் முழுமையான பாடக்கலைத்திட்டம்
- தொடக்கப்பள்ளிக்குச் சீரான நிலைமாற்றம்

தங்கள் பிள்ளைகளுக்கு முழு நாள் பராமரிப்புச் சேவை தேவைப்படும் பெற்றோர்கள், **பாலர் பள்ளிப் பராமரிப்புச் சேவையைத்** தேர்ந்தெடுக்கலாம். உகந்த சூழலில் அவர்கள் விளையாடவும் ஆராயவும் கண்டுபிடிப்புகளில் ஈடுபடவும் நேரம், இடம் ஆகியவற்றை இந்தப் பராமரிப்புச் சேவை ஏற்படுத்தித் தருகிறது. இந்தச் சேவை கல்வி அமைச்சின் பாலர் பள்ளி வளாகத்தின் உள்ளேயே அமைந்துள்ளது. பாலர் பள்ளிப் பராமரிப்பு, கல்வி அமைச்சின் வழிகாட்டுதல்களின்படி கல்வி அமைச்சால் பணியமர்த்தப்பட்டுள்ள சேவை வழங்குநர்களால் வழங்கப்படுகிறது.

இங்கே சொடுக்கியோ இடப்பக்கமுள்ள விரைவுத் தகவல் குறியீட்டை வருடியோ கல்வி அமைச்சின் பாலர் பள்ளிப் பாடக்கலைத்திட்டம், கற்றல் சூழல், கட்டணங்கள் குறித்த மேல் விவரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு விருப்பமான கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளின் பங்காளித்துவ இளம்பருவக்கால நிலையங்களை SchoolFinder வாயிலாக அறிந்து கொள்ளுங்கள்.

https://go.gov.sg/mkeycschoolfinder



# கல்வி அமைச்சின் பாலர் பள்ளி மாணவர் சேர்க்கை

கல்வி அமைச்சின் இளம்பருவக்கால நிலையங்களில் மழலையர் வகுப்பு இரண்டாம் ஆண்டில் படிக்கும் சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற பிள்ளைகளும் சிங்கப்பூர் நிரந்தரவாசம் பெற்ற பிள்ளைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிநிலைக்கு* உட்பட்டவர்களாக இருந்தால், அவர்கள் கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மழலையர் வகுப்பு இரண்டாம் ஆண்டில் படிக்கும் பிள்ளைகள் அந்த ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் நடைபெறும் மாணவர் சேர்க்கைப் பதிவு நடவடிக்கையின்போது கல்வி அமைச்சின் பங்காளித்துவப் பாலர் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படுவர். பதிவுசெய்யும் காலக்கட்டத்திற்கு முன்னர், உங்கள் பிள்ளை படிக்கும் இளம்பருவக்கால நிலையத்திலிருந்து கல்வி அமைச்சின் பாலர் பள்ளியின் மாணவர் சேர்க்கைக்கான அறிக்கைக் கடிதத்தை நீங்கள் பெறுவீர்கள். அந்தக் கடிதத்தில் மாணவர் சேர்க்கை செயல்முறையைப் பற்றிய கூடுதல் தகவல்கள் இருக்கும். மேலும், இந்தத் தகவலைக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளி இணையப் பக்கத்திலிருந்தும் (www.moe.gov.sg/mk-register) நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பிள்ளையின் விவரங்களைக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளி, E-Bridge-இல் இருந்தோ PCF Sparkletots-இல் இருந்தோ NTUC My First Skool-இல் இருந்தோ பெறுவதற்கு உங்களிடம் அனுமதி கோரப்படும். இது உங்கள் பிள்ளையைக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் பதிவு செய்வதற்கு வழிவகுக்கும். உங்கள் பிள்ளையின் விவரங்களில் ஏதேனும் மாற்றங்கள் இருக்குமாயின் அவற்றை E-bridge, PCF Sparkletots, NTUC My First Skool, ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதனால், நிலையத்திடம் உங்கள் பிள்ளையைப் பற்றிய மிகச் சரியான தகவல் இருக்கும்.

*மழலையர் வகுப்பு இரண்டாம் ஆண்டு (N2) பிள்ளைகள் ஜனவரி 31-ஆம் தேதிக்குள் இளம்பருவக்கால நிலையங்களில் N2 வகுப்பில் சேர்ந்துவிட வேண்டும். விவரங்களுக்கு இளம்பருவக்கால நிலையங்களை அணுகுங்கள்.

^நீங்கள் கல்வி அமைச்சின் பங்காளித்துவம் அல்லாத பாலர் பள்ளிகளில் பதிவு செய்ய முடிவு செய்தால், பிள்ளைகளுக்கு அந்தப் பாலர் பள்ளிகளில் முதலாம் ஆண்டு (K1) வகுப்பில் சேர, இடம் கிடைக்கும் உத்தரவாதம் இல்லை. கல்வி அமைச்சின் பங்காளித்துவம் அல்லாத பாலர் பள்ளிக்கான உங்களது விண்ணப்பம், பொதுவான மாணவர் சேர்க்கை விண்ணப்பங்களுடன் அவற்றிற்கான நிபந்தனைகள் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.



# கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பதிவு

1

### கல்வி அமைச்சின் பாலர் பள்ளி பொதுப் பார்வையிடும் நாள் (பிப்ரவரி)*

பொதுப் பார்வையிடும் நாளன்று கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளுக்குச் சென்று பாடத்திட்டங்கள், பள்ளித் திட்டங்கள், கற்றல் சூழல் ஆகியவற்றைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள்.

2

### கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பதிவு (பிப்ரவரி)*

உங்கள் பிள்ளையைக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் பதிவு செய்வதற்குரிய வழிமுறைகள் அறிவிப்புக் கடிதத்தில் உள்ளன. தயவு செய்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இணையத்தின் வழியே உங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பியுங்கள்.

3


## இடம் வழங்குதல் பற்றிய அறிவிப்பு (மார்ச்சு)*

கல்வி அமைச்சின் பாலர் பள்ளியில் உங்கள் பிள்ளை சேர்க்கப்பட்டதையும் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாடவேளையையும் மின்னஞ்சல் வாயிலாகக் கல்வி அமைச்சு உங்களுக்குத் தெரிவிக்கும். உங்கள் பிள்ளையின் இட ஒதுக்கீடு குறித்து நீங்கள் கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பதிலளிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அளிக்கப்பட்ட வாய்ப்புக் காலாவதியாகிவிடும்.

*பதிவிற்கான செயல்முறையையும் காலக்கெடு குறித்த மேல் விவரங்களையும் கல்வி அமைச்சின் பாலர் பள்ளி வலைத்தளத்தில், (www.moe.gov.sg/mk-register) பதிவுக்காலம் நெருங்கும்போது பெற்றுக்கொள்ளலாம். உங்கள் பிள்ளை ஜனவரி 31-க்குப் பிறகு இயங்கத் தொடங்கும் இளம்பருவக்கால நிலையத்தில் படித்தால், அவர்களுக்கான மாணவர் பதிவு காலக்கெடு மேலே உள்ளதிலிருந்து வேறுபடும். விவரங்களுக்கு இளம் பருவக்கால நிலையங்களை அணுகவும்.

# பாடவேளை ஒதுக்கீடு

உங்கள் பிள்ளை கல்வி அமைச்சின் முழு நேரப் பாலர் பள்ளியிலும் பாலர் பள்ளிப் பராமரிப்புத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருந்தால் அவர் காலையில் பாலர் பள்ளியிலும் மாலையில் பராமரிப்புத் திட்டத்திலும் இருப்பார்.



உங்கள் பிள்ளை கல்வி அமைச்சின் பாலர் பள்ளித் திட்டத்தில் மட்டும் சேர்க்கப்பட்டிருந்தால், உங்களுக்கு விருப்பமான பாடவேளையில் நடக்கும் வகுப்பில் இடமில்லாவிட்டால், அவருக்கு இடமிருக்கும் மற்றொரு பாடவேளை வழங்கப்படும்.




# தொடக்கப் பள்ளிக்குச் சீரான நிலை மாற்றம்

பாலர் பள்ளி முதலாம் ஆண்டு (K1) வகுப்புத் தொடங்குவதற்கு முன்னர் நீங்களும் உங்கள் பிள்ளையும் கல்வி அமைச்சின் பாலர் பள்ளியின் வழிகாட்டு அமர்விற்கு அழைக்கப்படுவீர்கள். இந்த நிகழ்ச்சியின்போது நீங்களும் உங்கள் பிள்ளையும் அவரது பாலர் பள்ளி ஆசிரியர்களையும் நண்பர்களையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவீர்கள். புதிய கற்றல் சூழலில் உங்கள் பிள்ளை தன்னை ஈடுபடுத்திக்கொள்ள இந்த நிகழ்ச்சி உதவியாக இருக்கும்.

தவணை1-இன் முதல் நாள் கல்வி அமைச்சின் பாலர் பள்ளிக்கு உங்கள் பிள்ளையோடு செல்லலாம். முதல் நாள் உங்கள் பிள்ளையோடு நீங்கள் பொழுதைக் கழிக்க நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். இதன்வழி நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளி வழமைகள் குறித்து உதவலாம். மேலும், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நீங்கள் ஆசிரியர்களிடம் உங்கள் பிள்ளையைப்பற்றிக் கூடுதல் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.

கல்வி அமைச்சின் பாலர் பள்ளியின் புதிய சூழலைச் சமாளிப்பதில் சவால்களை எதிர்நோக்கும் பிள்ளைகளை ஆசிரியர்கள் அடையாளம் காண்பார்கள். பின்னர், அவர்களின் பெற்றோருடன் இணைந்து புதிய கற்றல் சூழலில் அந்தப் பிள்ளைகள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளத் தேவையான ஆதரவை அளிப்பார்கள்.



*தயவு செய்து பாலர் பள்ளியின் ஏற்பாடுகளையும் வழிகாட்டுதல்களையும் கருத்திற்கொள்ளவும்.

மேல் விவரங்களுக்கு:
**6872 2220**
**www.moe.gov.sg/mk**

2025-ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது